முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No. 556/2021**

Witness PW 2

| பெயர் | ஆதிமுத்துவீரன் | மதம் | |
|---|---|---|---|
| த/பெ | பற்குணன் | தொழில் | |
| ஊர் | | வயது | |
| மாவட்டம் | | தேதி | 27.11.2023 |

இன்று (27/11/2023) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

வழக்கின் சொத்து விவரம் எனக்கு தெரியும். சொத்து எனது தாத்தா பெயரில் உள்ளது. அவர் பெயர் மொட்டைய கவுண்டர். எனது தாத்தா பெயரில் உள்ள கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா சுயமாக கிரையம் பெற்ற சொத்து இல்லை, அது அவரது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து. முதல் விசாரணையில் மொட்டைய கவுண்டர் பெயரில் இரண்டு ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. எனது தாத்தா மொட்டைய கவுண்டர் தனது மருமகள் மங்கம்மாள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். எனது பாட்டி பெயர் முத்தம்மாள். மொட்டைய கவுண்டருக்கு முத்தம்மாள் 3வது மனைவி என்றால் சரிதான். எனது தகப்பனாரும் மற்றும் இரண்டு பெண்களும் முத்தம்மாளின் குழந்தைகள். எனது தாத்தாவின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். மொட்டைய கவுண்டருக்கு வாரிசு என்பது குறித்து நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லஷ்மணன் என்பவருக்கு சகோதரி இல்லை. லஷ்மணன் என்பவருக்கு குமாரி என்ற சகோதரி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. லஷ்மணனுடைய தகப்பனாரும், எனது தாத்தா மொட்டைய கவுண்டர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மண்ணம்மாள் என்பவர் ரங்கநாதன் என்பவரிடமிருந்து சொத்து வாங்கியுள்ளார். ரங்கநாதன் என்பவர் தான் மொட்டைய கவுண்டரின் வாரிசு என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு

316/1970 என்ற வழக்கில் ரங்கநாதன் என்பவருக்கு கிடைத்த பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பு இல்லை. மண்ணம்மாள் பெயரில் உள்ளது என்றும், நான் தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மண்ணம்மாள் மற்றும் அவரது வாரிசுகள் தாக்கல் செய்துள்ள வழக்கு எனக்கு தெரியும். 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் 1ம் பிரதிவாதி மண்ணம்மாள் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் எனக்கு தெரியும். அந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கும், லஷ்மணனுக்கு எந்த பாகமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மண்ணம்மாள் தான் பட்டா வாங்கி வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா 6வது அயிட்ட சொத்தில் மாயவர் மகன் மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அவர் தான் அந்த வீட்டில் வசிக்கிறார் என்றால் சரிதான். அந்த வீடு எனது தகப்பனார் பெயரில் உள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும், என் தகப்பனார் பெயரில் அந்த வீடு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சொத்திற்குரியது இல்லை, அதனால் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-N.S.Jayaprakash)
Principal Subordinate Judge,
Villupuram